செய்தி வெளியீடு எண். 41-2018 நாள்: 17.07.2018

**விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக சிறுபான்மையினர் சமூகத்தை சேர்ந்த மக்களுக்கு கடன் உதவிகள் வழங்குவது தொடர்பாக கடன் மேளாக்கள் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

தமிழ்நாட்டில் சிறுபான்மையின சமூகத்தினை சார்ந்த மக்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் தனி நபர்கடன், கல்விக்கடன், கறவைமாடு வாங்க கடன், ஆட்டோ கடன், சிறு கடன் போன்ற பல்வேறு கடன் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

கடனுதவி பெற ஆண்டுவருமானம் நகர்புறத்தில் வசிப்பவர்களாக இருந்தால் ரூ.1,20,000/-க்கு மேற்படாமலும், கிராமப்புறத்தில் வசிப்பவராக இருந்தால் ரூ.98,000/- ஆயிரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் சாதிச் சான்று, வருமானச் சான்று, மாற்றுச்சான்று, குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று ஆகிய சான்றுகளின் நகல்களையும், கடன்பெறுவதற்கான தொழில் குறித்த விவரம், திட்ட அறிக்கை, கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும். 18 வயது நிறைவடைந்த, ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற சிறப்பு லோன் மேளாக்கள் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் நடத்தப்பட உள்ளது. விண்ணப்ப மனுக்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலோ அல்லது லோன் மேளாக்கள் நடைபெறும் வட்டாட்சியர் அலுவலகங்களிலோ பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெறும் லோன்மேளாவின்போது கொடுத்துக்கொள்ள வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பங்கள் டாம்கோவால் பெறப்பட்டு, ஒப்பளிக்கப்பட்டு வங்கி மூலமாக கடன்கள் வழங்கப்படும்.

லோன் மேளாக்கள் விக்கிரவாண்டி வட்டத்தில் 24.07.18 அன்றும், திண்டிவனம் வட்டத்தில் 31.07.18 அன்றும், மரக்காணம் வட்டத்தில் 07.08.18 அன்றும், செஞ்சி வட்டத்தில் 14.08.18 அன்றும், மேல்மலையனூரில் 21.08.18 அன்றும், திருக்கோவிலூரில் 28.08.18 அன்றும், கண்டாச்சிபுரத்தில் 05.09.18 அன்றும், உளுந்தூர்பேட்டையில் 12.09.18 அன்றும் வானூரில் 19.09.18 அன்றும், சின்னசேலத்தில் 26.09.18 அன்றும், கள்ளக்குறிச்சியில் 03.10.18 அன்றும், சங்கராபுரத்தில் 10.10.18 அன்றும் லோன்மேளாக்கள் நடைபெற உள்ளது. சம்பந்தப்பட்ட வட்டங்களில் வசித்துவரும் சிறுபான்மையின சமூகத்தை சேர்ந்த மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.